

கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தஞ்சாவூர் மத்திய மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளரும், தலைமைக் கழக பேச்சாளருமான வரகூர் க.காமராஜ் அவர்களை 5.2.2026 அன்று நேரில் சந்தித்து, உடல் நலம் விசாரித்தார். உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்டக் கழகச் செயலாளர் துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ. தலைமை செயற்குழு உறுப்பினர் து.செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் தாட்கோ தலைவர் நா. இளையராஜா, மாநகரக் கழகச் செயலாளரும், மாநகராட்சி மேயருமான சண். ராமநாதன் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், சிங்காரப்பேட்டை ஊராட்சி, புளியானூர் பொதுப்பணித்துறை ஏரிக்கு, கடப்பரை ஆற்றுநீரை திருப்பி விட ஏதுவாக, கனிமங்கள் மற்றும் குவாரிகள் திட்ட நிதியின் கீழ் ரூ.98.010 இலட்சம் மதிப்பில் தடுப்பணை கட்டுதல் மற்றும் கால்வாய் அமைக்கும் பணிகளை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார். உடன் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், மாவட்ட வன அலுவலர் மகேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### கார்ப்பரேட்டுகளுக்காக பொதுமக்களின் உயிரைப் பணயம் வைக்கும் ஒன்றிய அரசு 'மீல்ஸ் கிட்ஸ்' தொடர்பாக

# கொள்கைகளை வகுக்காமல் மாநிலங்களை கைகாட்டி தப்பிக்கப் பார்ப்பதா?

## கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டன அறிக்கை!

ஈரோடு, பிப்.8–

Meal kits எனப்படும் சமைக்கத் தயாராக உள்ள உணவுப் பொட்டலங்களின் பாதுகாப்பு மற்றும் லேபிளிங் தொடர்பாக வகுக்கப்பட்டுள்ள கொள்கைகள் குறித்து, நாடாளுமன்றத்தில் ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்திடம் கேள்வி எழுப்பினேன் என்று கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



மேலும் அவர் கூறியதாவது :–

இதற்கு நடைமுறைக்கு உதவாத பழைய விதிமுறைகளை காட்டியும், மாநிலங்கள் தான் சரிசெய்ய வேண்டும் என்று பொறுப்பை திசைதிருப்பும் வகையிலும், அடாவடியான பதில்களை அளித்துள்ளது ஒன்றிய அரசு.

மிகவும் தீவிரமான இந்த விவகாரத்தில், கோடிக்கணக்கான மக்களின் உயிர்களின் மீது கொஞ்சமும் அக்கறையில்லாமல் செயல்படும் ஒன்றிய அரசுக்கு எனது கடுமையான கண்டனங்களைப் பதிவு செய்கிறேன்.

**மாநில அரசுகளுக்கு அல்ல, ஒன்றிய அரசுக்குத் தான் பொறுப்பு!**

நான் எழுப்பிய கேள்வியானது, Meal kits தொடர்பாக கொள்கைகள் வகுப்பது பற்றியது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி, உணவுப் பொருட்களின் தர நிர்ணயம் மற்றும் கொள்கை உருவாக்கம் ஆகியவை ஒன்றிய பட்டியலின் கீழ் வரும் அதிகாரம். மேலும், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள FSSAI அமைப்பு தான், ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் பொதுவான உணவுப் பாதுகாப்பு விதிகளை வகுப்பது.

இப்படியிருக்க, Meal kits தொடர்பாக ஏன் 'கொள்கைகளை வகுக்கவில்லை என்று கேட்டால், மாநிலங்களை அதில் இணைத்துப் பேசுவது பிரச்சினையின் தீவிரத்தை மட்டுப்படுத்தும் மற்றும் தன்னுடைய பொறுப்பை தூக்கித் தூரவீசும் நாணயமற்ற செயல்.

**பொதுமக்களின் உயிரைப் பணயம் வைக்கும் ஒன்றிய அரசு!**

ஒன்றிய அரசு தனது பதிலில், இந்த Meal kitsகளுக்கு, 2020–ஆம் ஆண்டு காலத்து Food Safety and Standards விதிமுறைகளே போதுமானது என்று தெரிவித்துள்ளது. இதைவிட மெத்தனமான, குரூரமான பதிலைப் பார்க்க முடியாது.

இந்த சட்டத்தில் Multi unit pack, assorted pack ஆகியவை குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவை Meal kitகளை தனித்துவமாக குறிப்பவை அல்ல. Multi unit pack என்பவை, ஒரே பொருளை பல சிறு பாக்கெட்களாக கொண்டவை. உதாரணம், சிப்ஸ் பாக்கெட்டுகள். Assorted pack என்பது, ஒரே தன்மையைக் கொண்ட வெவ்வேறு சுவை கொண்ட பொருட்கள். உதாரணம், ஒரு பிஸ்கெட் பாக்கெட்டுக்குள் வெவ்வெறு வகை பிஸ்கெட்டுகள். ஆனால், Meal kits என்பவை, காய்கறிகள், இறைச்சி, மசாலாக்கள் போன்றவை உள்ளடக்கப்படும் முற்றிலும் வேறு வகை.

2020ம் ஆண்டு விதிகள், மொத்தமாக எல்லாவற்றுக்கும் ஒரே காலாவதி தேதி இருந்தால் போதுமானது என்று சொல்கிறது. ஆனால், Meal kitகளில் ஒவ்வொரு பொருளும் வெவ்வேறு வெப்பநிலையில் கெட்டுப்போகும் தன்மை கொண்டவை. 2020 விதிகள் உப்பு, சர்க்கரை, கொழுப்பின் அளவை மட்டும் குறிப்பிடச் சொல்கின்றனவே தவிர, அவை அதிகமாக இருந்தால் 'சிவப்பு நிற எச்சரிக்கை'யை குறிப்பிடச் சொல்லவில்லை. Meal kitகளில் இந்த மூன்றுமே சுவைக்காகவும், கெடாமல் இருக்கவும் அதிகமாக சேர்க்கப்பட வாய்ப்புள்ளது.

மேற்கொண்டு முக்கியமாக, 2020 விதிகளின்படி மொத்த பாக்கெட்டுக்கும் ஒரே ஒரு ஊட்டச்சத்து அட்டவணை கொடுத்தால் போதும். ஆனால், ஒரு Meal kit பாக்கெட்டுக்குள் 3, 4 வெவ்வேறு சிறு பாக்கெட்டுகள் இருக்கும். இவற்றின் ஊட்டச்சத்து தனித்தனியாக அளவிடக் கூடியது. மேலும், சமைக்கும் போது சேர்க்கப்படும் பொருட்களாலும் ஊட்டச்சத்து மாறும்.

**மக்கள் நலனை விட கார்ப்பரேட்களின் நலன் முக்கியம்!**

இப்படி, மிகவும் வேறுபட்ட காரணிகளைக் கொண்ட ஒரு வகைக்கு, பழைய விதியை காரணம் காட்டுவது, அபாயகரமான அலட்சியப் போக்கு.

ஒன்றிய அரசு இப்படி Meal kitகளுக்கு கொள்கைகள் வகுக்காமல் தாமதம் செய்வது, மக்களின் நலனைப் புறந்தள்ளி கார்ப்பரேட்களின் நலனை இந்த அரசு முன்னிலை;படுத்துவதை உறுதிப்படுத்துகிறது.

2025 2026 பொருளாதார ஆய்வறிக்கையின் படி, பதப்படுத்தப்பட்ட உணவுத்துறை 150% இந்தியாவில் வளர்ச்சி கண்டுள்ளது. இதில் Meal kits வகைக்கான சந்தை ஆய்வுத்தரவுகளை எடுத்தால், அது 2033ம் ஆண்டுக்குள் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 14.27 மடங்கு வளர்ச்சி காணும் என கணிக்கப்பட்டுள்ளது. அதாவது, 2024ல் 1.15 லட்சம் கோடியாக இருந்த இந்த சந்தை, 2033ம் ஆண்டுக்குள் 3.83 லட்சம் கோடியாக வளரும்.

இப்படி ஒரு பக்கத்தில் கார்ப்பரேட்கள் அசுர வளர்ச்சி கண்டு கொண்டிருக்க, இன்னொரு பக்கத்தில் மக்களின் உடல்நலனை பணயம் வைத்திருக்கிறது ஒன்றிய அரசு. முறையான கொள்கைகளும், விதிமுறைகளும் அற்ற ஒவ்வொரு நாள் தாமதமும் கோடிக்கணக்கான மக்களை ஆபத்தை நோக்கி பல அடிகள் முன்னே தள்ளுகிறது.

எனவே, மிக விரைவில் Meal kitகளுக்கான கொள்கைகளை ஒன்றிய அரசு வகுக்க வேண்டும். இனியும் கார்ப்பரேட்களின் நலனுக்காக மக்களின் தட்டில் விஷம் பரிமாறப்படுவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### ரூ. 40 கோடியில் 300 படுக்கைகள் சிறப்பு சிகிச்சை வசதிகளுடன்

# குளித்தலையில் மாவட்ட அரசு புதிய மருத்துவமனை!

## முதல்வர் காணொலியில் திறந்து வைத்தார்!





கரூர், பிப்.8 -

ரூ. 40 கோடி மதிப்பீட்டில் 300 படுக்கைகள் சிறப்பு சிகிச்சை வசதிகளுடன் குளித்தலையில் மாவட்ட அரசு புதிய மருத்துவமனையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்கள். கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி நன்றி தெரிவித்து பேசினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கரூர் மாவட்டம் குளித்தலையில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை புதிய கட்டிடத்தை காணொளி காட்சி வாயிலாக, திறந்து வைத்தார்கள். கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி, கரூர் கலெக்டர் மீ. தங்கவேல் விழாவில் கலந்து கொண்டனர்.

பின்னர் எம்.எல்.ஏ செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குளித்தலையில் அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி அரசாணை வெளியிட்டு அதற்கு ரூ. 40 கோடியில் கூடுதல் கட்டிடம். கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கினார்கள்.

1.09.125 சதுரடி பரப்பில் கட்டப்பட்டுள்ள இந்த மருத்துவமனையில் 300 படுக்கை வசதிகள் உள்ளன. இங்கு ஒரு நாளைக்கு ஏறத்தாழ 800 முதல் 1000 வரை புற நோயாளிகளும், 150 முதல் 200 உள்நோயாளிகளும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மாவட்ட மக்களின் சார்பில் கோடான கோடி நன்றிகளை சமர்ப்பித்து வணங்குகின்றேன்.

குளித்தலையை சுற்றியுள்ள ஏழை எளிய அடித்தட்டு மக்களுக்கான மருத்துவ சேவையை வழங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு முதலமைச்சர் அவர்கள் இந்த மருத்துவமனை கட்டிடங்களை வழங்கி தங்களது பொற்கரங்களால் திறந்து வைத்திருக்கின்றார்கள், கூடுதலாக நிதி தேவை என்று மருத்துவம் மற்றும் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்கள் ஆய்வுக்கு வந்த போது மருத்துவமனை நிர்வாகத்தின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. கூடுதலாக ரூ.20 கோடி நிதி அளிக்கபட்டது. இனி சிகிச்சைக்காக குளித்தலை மக்கள் திருச்சிக்கோ, கரூருக்கோ செல்ல வேண்டிய நிலையை மாற்றி குளித்தலையிலேயே உயர் சிகிச்சை பெறக்கூடிய சிறப்பு வாய்ந்த மருத்துவமனையாக உருவாக்கித் தந்திருக்கிறார்கள். தொடர்ந்து மருத்துவமனைக்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றதோ அத்தனையும் முதல்வர் அவர்கள் நிறைவேற்றுவார்கள்.

முதல் தளத்தில் சிறப்பு புறநோயாளிகள் பிரிவு, எலும்பியல், கண்கள், புற நோயாளிகள் பிரிவு தீவிர சிகிச்சை பிரிவு, நீரிழிவு வார்டு, நிர்வாக அறை மற்றும் கழிப்பறைகளும், இரண்டாம் தளத்தில் பெண்களுக்கான பொது சிகிச்சை வார்டு, ஆண்களுக்கான பொது சிகிச்சை வார்டு, எலும்பியல் பெண்கள் வார்டு, இரத்த வங்கி மற்றும் கழிப்பறைகளும்.

மூன்றாம் தளத்தில் தனிமைப்படுத்தப்பட்ட பெண்கள் வார்டு, தனிமைப்படுத்தப்பட்ட ஆண்கள் வார்டு, தீக்காய சிகிச்சை அறை. எலும்பியல் ஆண்கள் வார்டு மற்றும் கழிப்பறைகளும், நான்காம் தளத்தில் அறுவை சிகிச்சை அறைகள் 1.2.3 அறுவை சிகிச்சைக்கு தயார் படுத்தும் அறை அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு அறை மருத்துவர் மற்றும் செவிலியர் அறை, கண்களுக்கான மருத்துவ பிரிவு மற்றும் கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் குளித்தலை சார் ஆட்சியர் சுவாதிஸ்ரீ, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு. செழியன், துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு. சுப்பிரமணி, குளித்தலை நகர்மன்ற தலைவர் சகுந்தலா பல்லவி ராஜா, கலந்து கொண்டனர்.

### தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிராமப் பஞ்சாயத்துகளில் ஒன்றிய அரசின் ஆதரவு பெற்ற

# திட்டங்கள் திறம்பட திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

## மக்களவையில் தருமபுரி எம்.பி. ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, பிப். 8 -

நடைபெற்று வரும் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிராம பஞ்சாயத்துகளில் ஒன்றிய அரசின் ஆதரவு பெற்ற திட்டங்கள் திறம்பட திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டுள்ளதா? அப்படியானால் அந்த கிராம பஞ்சாயத்துகளின் திறன் மற்றும் செயல்பாடுகள் குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் அளவீடு செய்துள்ளதா?

கடந்த 3 வருடங்களில் பஞ்சாயத் ராஜ் நிறுவனங்களின் மூலம் ஒன்றிய அரசு வழங்கிய நிதி மற்றும் அதனால் கிராம பஞ்சாயத்துகள் பெற்ற சிறப்பு திட்டங்கள் குறித்த விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத் ராஜ் நிறுவனங்களின் செயல்பாடுகள் மற்றும் அவற்றின் செயல்திறன் குறித்து கண்காணிக்க ஒன்றிய அரசால் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா?



தருமபுரி போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள பஞ்சாயத்துககளுக்கு நிதி சுயாட்சி, தொழில்நுட்பம் மேம்பாடு மற்றும் பணியாளர்கள் ஆதரவை பெருக்க ஒன்றிய அரசால் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? என்று பஞ்சாயத் ராஜ் அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் அலியாஸ் லாலன் சிங்கிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி மக்களவையில் கேள்வி எழுப்பி உள்ளார்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை!

# புதுக்கோட்டையில் "தமிழ்நாடு தலைகுனியாது" மாபெரும் பொதுக்கூட்டம்!

## பொன்.முத்துராமலிங்கம் - அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

## கவிச்சுடர் கவிதைப்பித்தன் - டாக்டர் வை.முத்துராஜா - த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை. பிப்.8-

புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி சார்பில் "தமிழ்நாடு தலைகுனியாது பொதுக்கூட்டம் 03.02.2026, செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் டாக்ஸி மார்கெட் புதுக்கோட்டையில், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், புதுக்கோட்டை வடக்கு மாநகர பொறுப்பாளர், துணை மேயர் எம்.லியாகத் அலி மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர், கறம்பக்குடி தெற்கு ஒன்றியச் செயலாளர் தவ. பாஞ்சாலன், புதுக்கோட்டை தெற்கு மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஷ் ஆகியோர் வரவேற்புரையிலும் நடைபெற்றது. நிகழ்வில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, கவிச்சுடர் கவிதைப்பித்தன், வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், திலகவதி செந்தில், த. சந்திரசேகரன், அரு.வீரமணி, சுப.சரவணன், செ. அசோகபாண்டியன், கே.ஆர்.என்.போஸ், எஸ். எஸ்.கருப்பையா, பி. ராஜேஸ்வரி, சு.சண்முகம், பூங்குடி எம்.சிவக்குமார், மாநகர கழக நிர்வாகிகள்: அரெத்தினம், ப.ரெங்க ராஜன், மா.மணிவேலன், முத்தழகு பழனிவேலு, மு.ராஜதுரை, மு.க.அறிவுடைநம்பி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தலைமை கழக இளம் பேச்சாளர் சொ.தமிழினியன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் எம்.பரமசிவம், பி.அண்ணாதுரை, சி. ஆர்.வி.சித்ரா, எம்.எம். பாலு, செந்தாமரை பாலு, கவிவேந்தன், சி.அரங்க நாயகம், தவசு மணி, டி.எம்.ஆர். ராமமூர்த்தி, மு.கலைஞர் கருணாநிதி மற்றும் பலர் பங்கேற்றனர்.



நேற்று முன்தினம் முதல்வர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டம் கெரடாமட்டம் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட யோகா &இயற்கை மருத்துவப் பிரிவு கட்டிடத்தினை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். அதனை தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு ஆகியோர் நேற்று முன்தினம் (6.2.2026) பார்வையிட்டனர். இந்நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவக்குமார், பிரகாஷ்,வட்டார சுகாதார அலுவலர் ரஞ்சித்,மற்றும் கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன்,பேரூர் கழகச் செயலாளர் காளிதாஸ்,கோத்தகிரி வட்டார காங்கிரஸ் தலைவர் சில்லாபாபு, கோத்தகிரி ஒன்றிய துணைச் செயலாளர் கணபதி, மாவட்ட ஆதிதிராவிட அணி அமைப்பாளர் ராம்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஜெ. விவேகானந்தன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் விவேக்பொன்தோஸ், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் மதிவாணன் உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், குடிமங்கலம் வடக்கு ஒன்றியம், சோமவாரப்பட்டி பகுதியில் தே.மு.தி.க, அ.தி.மு.க. மற்றும் த.வெ.கவைச் சேர்ந்த 120க்கும் மேற்பட்டோர் மாவட்ட கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் குடிமங்கலம் ஒன்றிய கழக செயலாளர் சா.ராஜமாணிக்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.